THE EDUCATION STATE

EARLY CHILDHOOD

# மாற்றம்: பள்ளிக்கூடத்தில் ஒரு நேர்மறைத் தொடக்கம்

## மாற்றத்திற்கான கற்றல் மற்றும் மேம்பாட்டு அறிக்கையைப் பூர்த்தி செய்ய, குடும்பங்களுக்கு உதவும் வழிகாட்டல்கள்

### பள்ளிக்கூடத்தில் ஒரு நேர்மறைத் தொடக்கம் ஏன் முக்கியமாக உள்ளது?

பள்ளிக்கூடத்தில் ஒரு நேர்மறைத் தொடக்கமானது உங்கள் குழந்தைக்குச் சிறந்த கற்றல் மற்றும் நல்வாழ்வு சார்ந்த விளைபயன்களுக்கு வழிவகுக்கிறது. அது:

- அவர்களுடைய கற்றல் மற்றும் மேம்பாட்டில் குறுக்கீடுகளைத் தவிர்க்கிறது
- உங்கள் குழந்தை பாதுகாப்பாகவும், தன்னம்பிக்கையாகவும், இணைந்திருப்பதாகவும் *உணர* உதவுகிறது
- மீண்டு வரும் தன்மையை மேம்படுத்துகிறது.

### மாற்றத்திற்கான கற்றல் மற்றும் மேம்பாட்டு அறிக்கை என்றால் என்ன?

(மாற்றத்திற்கான அறிக்கை *என* அழைக்கப்படும்) ஒரு மாற்றத்திற்கான கற்றல் மற்றும் மேம்பாட்டு அறிக்கையானது ஓர் ஆரம்பகாலக் குழந்தைப்பருவச் சேவையிலிருந்து பள்ளிக்கூடத்திற்கு ஒவ்வொரு குழந்தையும் செல்வதற்காக, அவர்களுக்காக எழுதப்படுகிறது. சேவைகள், பள்ளிக்கூடங்கள், குடும்பங்கள் ஆகியவற்றிற்கிடையே தகவலை பகிர்வத்தை மாற்றத்திற்கான அறிக்கை எளிதாக்குகிறது.

உங்கள் குழந்தையின் மாற்றத்திற்கான அறிக்கையில் இவை உள்ளடங்கும்:

- உங்கள் குழந்தையின் பெயர், பிறந்த தேதி மற்றும் புகைப்படம்
- உங்கள் பெயர் மற்றும் தொடர்பு விவரங்கள்
- உங்கள் குழந்தையை ஆதரிக்கின்ற ஆரம்பகாலக் குழந்தைப்பருவச் சேவை மற்றும் ஏதேனும் பிற ஆரம்பகாலக் குழந்தைப்பருவ நிபுணர்களின் பெயர் மற்றும் தொடர்பு விவரங்கள்.
- உங்கள் குழந்தையின் ஆர்வங்கள், திறமைகள், திறன்கள் ஆகியவை பற்றிய தகவல்
- உங்கள் குழந்தையின் கற்றலை ஆதரிக்க, கற்பிக்கும் உத்திகள்.

உங்கள் குழந்தையைப் பற்றி தெரிந்துகொள்வதற்கும், அவரது கற்றலுக்குத் திட்டமிடுவதற்கும் இந்தத் தகவல் உங்கள் குழந்தையின் தயார்ப்படுத்தல் ஆசிரியருக்கு உதவுகிறது. பள்ளிக்கூடத்தில் உங்கள் குழந்தை தொடங்கும்போது உங்கள் குழந்தையின் கற்றலை நீங்கள் புரிந்துகொள்ள, ஆதரவளிக்க, விவாதிக்க, மாற்றத்திற்கான அறிக்கையும் உங்களுக்கு உதவலாம்.

உங்கள் குழந்தை ஒரு பள்ளிக்கூட நேரத்திற்கு வெளியிலான பராமரிப்பு (Outside School Hours Care, OSHC) சேவைக்குச் செல்வார்கள் எனில், மாற்றத்திற்கான அறிக்கையின் ஒரு நகலானது OSHC சேவைக்கும் வழங்கப்படும்.

உங்கள் குழந்தையின் மாற்றத்திற்கான அறிக்கை இவற்றிற்கு உதவுகின்றன:

VICTORIA State Government | Education and Training

- உங்கள் குழந்தையின் ஆர்வங்களுக்கான திட்டம்
- உங்கள் குழந்தையின் ஆரம்பகாலக் குழந்தைப்பருவச் சேவையிலிருந்து பள்ளிக்கூடத்திற்கு ஒரு சீரான மாற்றத்திற்கான உதவி.

## மாற்றத்திற்கான அறிக்கைக்கு உங்கள் உள்ளீடு

உங்கள் குழந்தையின் மாற்றத்திற்கான அறிக்கைக்குப் பங்களிப்பதன் மூலம், பள்ளிக்கூடத்தில் ஒரு நேர்மறையான தொடக்கத்தைக் கொண்டிருக்க அவர்களுக்கு நீங்கள் உதவலாம்.

வெவ்வேறு நபர்கள் பூர்த்திசெய்வதற்காக, மாற்றத்திற்கான அறிக்கையில் பிரிவுகள் உள்ளன:

**பிரிவு 1 மற்றும் 1.1** ஆகியவை உங்கள் குழந்தையின் ஆரம்பகாலக் குழந்தைப்பருவக் கல்வியாளரால் பூர்த்திசெய்யப்படுகின்றன.

**பிரிவு 1.2**-ஆனது உங்கள் குழந்தைக்கு மேம்பாட்டில் தாமதம் அல்லது இயலாமை இருந்தால், உங்கள் குழந்தையின் ஆரம்பகாலக் குழந்தைப்பருவக் கல்வியாளரால் பூர்த்திசெய்யப்படலாம். உங்கள் குழந்தையை ஆதரிக்கும் பிற ஆரம்பகாலக் குழந்தைப்பருவ நிபுணர்களும் பங்களிக்கலாம்.

**பிரிவு 2: குழந்தை** என்பது நீங்கள் அல்லது ஆரம்பகாலக் குழந்தைப்பருவக் கல்வியாளர் போன்ற ஒரு பழக்கமான பெரியவர் உதவியுடன், உங்கள் குழந்தையால் நிரப்பப்பட வேண்டும்.

**பிரிவு 3: குடும்பம்** என்பது உங்களால் பூர்த்திசெய்யப்பட வேண்டியது. இது இவற்றைப் பற்றிய உங்களுடைய முக்கியமான கண்ணோட்டங்களைப் பற்றிக் கேட்கிறது:

- உங்கள் குழந்தையின் ஆர்வங்கள்
- பள்ளிக்கூடத்தில் உங்கள் குழந்தைக்கான உங்கள் நம்பிக்கைகள், ஆசைகள், இலக்குகள்.

நீங்கள் மற்றும் உங்கள் குழந்தையுடன் தகவல்தொடர்பு கொள்வதற்காக, உங்கள் குழந்தையின் ஆசிரியருக்கு (மற்றும் அவர்களுக்கு OSHC கல்வியாளர் இருந்தால் அவருக்கு) இந்தத் தகவல் உதவலாம் மற்றும் உங்கள் குழந்தையின் கற்றல் மற்றும் மேம்பாட்டை ஆதரிக்க உதவலாம்.

## அடுத்து என்ன நடக்கும்?

உங்கள் குழந்தையின் ஆரம்பகாலக் குழந்தைப்பருவக் கல்வியாளரிடம் பூர்த்திசெய்யப்பட்ட பிரிவு 3-ஐ (மற்றும் அதனுடன் உங்கள் குழந்தைக்கு நீங்கள் உதவியிருந்தால், பிரிவு 2) திருப்பியளிக்கவும்.

மாற்றத்திற்கான அறிக்கையின் பிரிவுகள் அனைத்தையும் அவர்கள் ஒன்றாகச் சேர்த்து, ஒரு நகலை இவர்களுக்கு வழங்குவார்கள்:

- நீங்கள்
- உங்கள் குழந்தையின் பள்ளிக்கூடம்
- உங்கள் குழந்தைக்கு OSHC சேவை இருந்தால், அதற்கு.

நீங்கள் இன்னும் ஒரு பள்ளிக்கூடத்தைத் தேர்வுசெய்யவில்லை எனில், உங்களிடம் மாற்றத்திற்கான அறிக்கையின் இரண்டாவது நகல் வழங்கப்படும். உங்கள் குழந்தையை நீங்கள் பதிவுசெய்யும்போது நீங்கள் பள்ளியில் இந்த நகலை வழங்கலாம்.

பிரிவு 3-ஐ நீங்கள் திருப்பியளிக்கவில்லை எனில், ஆரம்பகாலக் குழந்தைப்பருவக் கல்வியாளர் உங்களுடன், உங்கள் குழந்தையின் பள்ளிகூடத்துடன் மற்றும் உங்கள் குழந்தைக்கு OSHC சேவை இருந்தால், அவர்களிடமும் மீதமுள்ள பூர்த்திசெய்யப்பட்ட மாற்றத்திற்கான அறிக்கையைப் பகிர்வார்.

மாற்றத்திற்கான அறிக்கையில் தகவலைப் பகிர்வது பள்ளிக்கூடத்தில் குழந்தையின் வெற்றிகரமான மாற்றத்திற்கு உதவுகிறது. இருப்பினும், உங்கள் குழந்தையின் பள்ளிக்கூடத்தில் மாற்றத்திற்கான அறிக்கையை பகிர்வதற்கு நீங்கள் விரும்பவில்லை எனில், உங்கள் குழந்தையின் ஆரம்பகாலக் குழந்தைப்பருவக் கல்வியாளரிடம் பேசவும்.

சில சமயங்களில் விக்டோரியாவைச் சார்ந்த கல்வி மற்றும் பாதுகாப்பு நிபுணர்கள், ஒரு குழந்தையின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பைக் காக்க, தகவலைப் பகிரவேண்டியுள்ளது. பராமரிப்பு, பாகுபாடின்மை, தொழில்சார்ந்த சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு, குழந்தையின் நலவாழ்வு மற்றும் பாதுகாப்புக் கடமைகள் ஆகியவற்றில் இதன் கடமையை நிறைவேற்றத் தேவையான இடத்தில், உங்கள் குழந்தை மற்றும் குடும்பம் பற்றிய தகவலை உங்கள் ஆரம்பகாலக் குழந்தைப்பருவக் கல்விச் சேவை பகிரக்கூடும். மேலதிகத் தகவலுக்கு, https://www.vic.gov.au/information-sharing-schemes-and-the-maram-framework தளத்தைப் பார்வையிடவும்

## மேலதிகத் தகவலுக்கு

Www.education.vic.gov.au/transitiontoschool தளத்தைப் பார்வையிடவும்

Www.education.vic.gov.au/transitiontoschool தளத்தில் வெவ்வேறு மொழிகளில் இந்த ஆவணம் கிடைக்கிறது.